## தைப்பூச நேர்த்திக்கடன்கள் - பதிவுமுறை

சிங்கப்பூர் தைப்பூசத் திருவிழாவில் பல்வகை நேர்த்திக்கடன்கள் செலுத்தப்படும். எல்லா நேர்த்திக்கடன்களுக்கான முன்பதிவும் இணையவழி மட்டுமே (www.thaipusam.sg) ஏற்றுக்கொள்ளப்படும். அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

### பால்குடம் சீட்டு

தைப்பூசம் 2026இல் பால்குட நேர்த்திக்கடன் செலுத்த விரும்பும் பக்தர்கள் கோயிலில் தயார் செய்யப்பட்ட பால்குடங்கள் அல்லது சுயமாகத் தயார் செய்யப்பட்ட பால்குடங்களைச் செலுத்தலாம். கோயிலில் தயார் செய்யப்படும் பால்குடங்களைப் பக்தர்கள் அருள்மிகு தெண்டாயுதபாணி கோயில், ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில் ஆகிய இரு இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

| நேர்த்திக்கடன் | பதிவுக் காலம் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| பால்குடம் (சுயமாகத் தயார் செய்தது) | 10.12.2025 முதல் 30.01.2026 | $20 |
| பால்குடம் (கோயிலில் தயார் செய்தது) | 10.12.2025 முதல் 30.01.2026 | $25 |

### முக்கியக் குறிப்புகள் (அனைத்துப் பால்குடங்கள்)

- இணையவழிப் பதிவின்போது தங்களுக்கு விருப்பமான நேரத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும்
- அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நேரத்தில் மட்டுமே, உரிய கோயிலுக்குச் செல்லவேண்டும்
  - **கவனத்திற்கு:** குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் வரும் பக்தர்களுக்கு, கூட்ட நெரிசல் கருதி, அனுமதி மறுக்கப்படும்
- ஒவ்வோர் ஆண்டும் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 3.00 மணி வரை, அதிக பக்தர்கள் பால்குடம் எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால், அன்புகூர்ந்து மற்ற நேரங்களைப் பரிசீலிக்கவும்.
- இணையம்வழி ரசீது வாங்க உதவி தேவைப்பட்டால், மாலை 6.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை இரு ஆலயங்களிலும் உதவி நாடலாம்.
- ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலில் இடப் பற்றாக்குறை, அதிகக் கூட்டம் முதலிய காரணங்களால், தைப்பூசத்திற்கு முதல் நாளான 31.01.2026 அன்று இரவில் பால்குடம் எடுக்கும் பக்தர்கள் சுயமாகத் தயார் செய்யும் பால்குடங்களை வீட்டிலேயே தயார் செய்து வரும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
- பதிவுசெய்த பக்தர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதால், பதிவு செய்யாது பால்குடம் எடுக்க முற்படும் பக்தர்கள், தைப்பூச ஊர்வலம் முழுவதும் தாமதத்தை எதிர்கொள்ள நேரிடலாம்.

### முக்கியக் குறிப்புகள் (கோயிலில் தயார் செய்த பால்குடம்)

- இணையவழிப் பதிவின்போது தாங்கள் பால்குடம் பெற விரும்பும் கோயிலைத் தேர்ந்தெடுக்கவும்; பின்னர் அந்தந்தக் கோயில்களில் இருந்து மட்டுமே பால்குடத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.
- ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலில் பால்குடத்தைப் பெற்றுக்கொள்ளும் பக்தர்கள், விநாயகர் சந்நிதியில் அல்லது பிஜிபி திருமண மண்டபத்தில் பால்குடத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அதன்பின்னர், பெருமாள் கோயிலிலிருந்து அருள்மிகு தெண்டாயுதபாணி கோயிலுக்கு நடந்து சென்று, பால்குட நேர்த்திக்கடனைச் செலுத்தலாம்.
- அருள்மிகு தெண்டாயுதபாணி கோயிலில் பால்குடத்தைப் பெற்றுக்கொள்ளும் பக்தர்கள், ரிவர் வேலி ரோடு (River Valley Road) வழியாக வந்து பால்குடத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அதன்பின்னர், அவர்கள் தெண்டாயுதபாணி கோயிலை வலம் வந்து, பால்குட நேர்த்திக்கடனைச் செலுத்தலாம்.
- காவடி எடுக்கும் அன்பர்களுடன் கோயிலில் தயார் செய்த பால்குடங்களை எடுக்க விரும்பும் பக்தர்கள்:
  - கூடுமானவரை, ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலில் தயார் செய்த பால்குடங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
  - அல்லது, காவடிப் பிரார்த்தனை செலுத்திய பிறகு, அருள்மிகு தெண்டாயுதபாணி கோயிலில் தயார் செய்த பால்குடங்களைப் பெற்றுக்கொள்ள, ரிவர் வேலி ரோடு (River Valley Road) வழியாக மீண்டும் கோயிலுக்குள் செல்லவேண்டியிருக்கும்.

### காவடிச் சீட்டு

| நேர்த்திக்கடன் | பதிவுக் காலம் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| பால் காவடி & தொட்டில் காவடி | 10.12.2025 முதல் 30.01.2026 | $40 |
| இரதக் காவடி & அலகுக் காவடி | 14.12.2025 முதல் 25.01.2026 | $100 |

- பால் / தொட்டில் காவடிச் சீட்டுகளை இணையம்வழி வாங்கவேண்டும்.
  - இணையம்வழி ரசீது வாங்க உதவி தேவைப்பட்டால், மாலை 6.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை இரு ஆலயங்களிலும் உதவி நாடலாம்.
- அலகு / ரதக் காவடிக்கு இணையம்வழி பதிந்துகொண்டு, அவற்றுக்கான கட்டணத்தை ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலில் செலுத்தி, ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும்.
- 16 வயதிற்கு உட்பட்ட பக்தர்கள்
  - பால்குடம் அல்லது பால் காவடி எடுப்பதற்கு மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
  - கொக்கிகளும் அலகுகளும் குத்திக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது.

### அனைத்துப் பக்தர்களுக்கான முக்கிய அறிவிப்புகள்

- அலகு அல்லது இரதக் காவடி எடுப்போர் தங்களுக்குத் துணை வருவோரில் ஒருவரை (21 வயதுக்கும் மேல் இருக்கவேண்டும்) காவடிப் பிரதிநிதியாக நியமிக்கவேண்டும். காவடி எடுப்பவரும் காவடிப் பிரதிநிதியும் தங்கள் குழுவில் இடம்பெறுவோரின் நடத்தைக்குப் பொறுப்பேற்கவேண்டும்.
- உடல்நலக் குறையுள்ள பக்தர்கள் (எ.கா. நீரிழிவு நோய், இருதய நோய், உயர் ரத்த அழுத்தம் முதலானவை) தங்கள் குடும்ப மருத்துவரின் ஆலோசனையைப் பெற்ற பின்னர், காவடி எடுப்பது பற்றி முடிவெடுக்கவேண்டும்.
- அலகு, ரதக் காவடி எடுக்கும் பக்தர்கள் ரேஸ் கோர்ஸ் ரோடு (Race Course Road) வழியாக ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலுக்குள் நுழையவேண்டும்.

| நேர்த்திக்கடன் | ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில் | |
|---|---|---|
| | நுழையும் நேரம் | வெளியேறும் நேரம் |
| பால்குடம் | பதிவுசெய்த நேரத்தில் மட்டும் | |
| பால் காவடி | 31.01.2026, இரவு 8.00 மணி முதல் | 01.02.2026, நண்பகல் 12.00 மணி வரை |
| தொட்டில் காவடி | | |
| இரதக் காவடி & அலகுக் காவடி (காலை) | 01.02.2026, பின்னிரவு 2.00 மணி முதல் காலை 9.00 மணி வரை | |
| இரதக் காவடி & அலகுக் காவடி (மாலை) | 01.02.2026, காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை | 01.02.2026, மாலை 5.00 மணிக்கு முன்னர் |

### சிறப்பு ஏற்பாடுகள்

**ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில்**

- பக்தர்களுக்குத் தேவை இருப்பின், காவடி எடுப்பவர்களுக்கு அலகு குத்திவிடும் சேவைகளைத் தொண்டூழியர்கள் புரிவர்.

**அருள்மிகு தெண்டாயுதபாணி கோயில்**

- முடிக் காணிக்கை செலுத்துவோரின் வசதிக்காக கோயிலுக்கு அருகில் உள்ள பகுதியில் உரிய ஏற்பாடுகள் பின்வரும் நேரங்களில் மட்டுமே செய்யப்பட்டுள்ளன.

| தேதி | நேரம் |
|---|---|
| 17.01.2026 முதல் 30.01.2026 வரை | காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை; மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை |

- கவனத்திற்கு: தைப்பூசத்திற்கு முதல் நாளும் தைப்பூசம் அன்றும் முடிக் காணிக்கை செலுத்துவதற்கான சேவை இருக்காது.

### வெள்ளி இரத ஊர்வலம்

31.01.2026, சனிக்கிழமை

- அருள்மிகு தெண்டாயுதபாணி கோயிலிலிருந்து காலை 5.00 மணிக்கு முருகப்பெருமானின் வெள்ளி இரத ஊர்வலம் புறப்பட்டு, கீழ்க்கண்ட இடங்களில் நிற்கும்.

| ரதம் நிற்கும் இடம் | உத்தேச நேரம் |
|---|---|
| ஸ்ரீ மாரியம்மன் கோயில், சவுத் பிரிட்ஜ் ரோடு | காலை 6.30 மணி |
| அருள்மிகு லயன் சித்தி விநாயகர் கோயில், கியோங் செய்க் ரோடு | காலை 7.30 மணி |

- வெள்ளி ரதம், அருள்மிகு லயன் சித்தி விநாயகர் கோயிலிலிருந்து அன்றைய தினம் மாலை 5.00 மணிக்குப் புறப்பட்டு, கீழ்க்கண்ட வழியாக வரும்.
- ரத வழித்தடங்கள் ரத ஊர்வல அனுமதிக்கு உட்பட்டவை.

| ரதம் நிற்கும் இடம் | உத்தேச நேரம் |
|---|---|
| பேங்க் ஆஃப் இந்தியா, சிசில் ஸ்டிரீட் | மாலை 6.40 மணி |
| இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சிசில் ஸ்டிரீட் | இரவு 7.00 மணி |
| சினகோக் ஸ்டிரீட் | இரவு 7.30 மணி |
| ஹை ஸ்டிரீட் | இரவு 8.15 மணி |
| அருள்மிகு தெண்டாயுதபாணி கோயில் | இரவு 9.00 மணி |

### அன்னதானம்

01.02.2026, ஞாயிற்றுக்கிழமை

- அருள்மிகு தெண்டாயுதபாணி கோயிலில் தைப்பூச அன்னதானம், நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை நடைபெறும்.



(R) Printed by: K.S.Maniam Printing & Ent., Johor Bahru, Malaysia. Tel: 07-386 1819

ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயில்
ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில்
இணைந்து நடத்தும்

# தைப்பூசத் திருவிழா 2026

01.02.2026 ஞாயிற்றுக்கிழமை



# THAIPUSAM FESTIVAL 2026

SUNDAY, 01.02.2026

Jointly Organised by:
Sri Thendayuthapani Temple (STT)
Sri Srinivasa Perumal Temple (SSPT)



## THAIPUSAM FESTIVAL 2026

While there are various offerings made to Lord Muruga, the offerings of Kavadi and Milk Pot are considered to be of special significance. Thaipusam festival is celebrated every year on the full moon day of the Tamil month of Thai, when the Poosam star rises. The upcoming Thaipusam festival will be held on Sunday, 01.02.2026.

## தைப்பூசத் திருவிழா 2026

முருகப்பெருமானுக்குச் செலுத்தும் நேர்த்திக்கடன்கள் பல்வகையாயினும், காவடி, பால்குடம் ஆகியவற்றைச் செலுத்தும் நேர்த்திக்கடன் மிகவும் சிறப்பு வாய்ந்தது. தை மாதம், பௌர்ணமி அன்று வரும் பூச நட்சத்திரத்தில் ஆண்டுதோறும் தைப்பூசத் திருவிழா கொண்டாடப்படுகிறது. எதிர்வரும் தைப்பூசத் திருவிழா 01.02.2026, ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறவுள்ளது.

## THAIPUSAM OFFERINGS – REGISTRATION PROCEDURE

Various offerings can be made during the Thaipusam Festival in Singapore. All registrations for these offerings will be accepted only through the online portal (www.thaipusam.sg). The details are as follows:

### MILK POT TICKETS

Devotees wishing to offer a Milk Pot during Thaipusam 2026 may either use temple-prepared Milk Pots or bring their own. The temple-prepared Milk Pots can be collected at either Sri Thendayuthapani Temple or Sri Srinivasa Perumal Temple.

| Offering | Registration Period | Registration Fee |
|---|---|---|
| Milk Pot (Self-prepared) | 10.12.2025 to 30.01.2026 | $20 |
| Milk Pot (Temple-prepared) | 10.12.2025 to 30.01.2026 | $25 |

### IMPORTANT NOTES (FOR ALL MILK POTS):

- When registering online, please select your preferred time slot.
- Devotees should come only during the selected time slot.
  - Note: Devotees arriving before the designated time will be denied entry to reduce crowd congestion.
- It is expected that many devotees will come for Milk Pot offerings between 12:00 AM and 3:00 AM. Thus, devotees are kindly requested to consider selecting alternative time slots.
- Devotees requiring assistance for online registration can approach both temples from 6.00pm to 8.30pm.
- Due to space constraint at SSPT and overcrowding on the eve of Thaipusam, (Saturday, 31st January 2026), devotees are kindly requested to prepare their Milk Pots at home (for self-prepared Milk Pots).
- Devotees who have not registered for Milk Pot vows are likely to face delays throughout the procession as registered devotees would be prioritized

## IMPORTANT NOTES (FOR TEMPLE-PREPARED MILK POTS):

- During online registration, select the temple where you wish to collect the Milk Pot. After that, collect the Milk Pot only from the chosen temple.
- Devotees collecting Milk Pots from Sri Srinivasa Perumal Temple may collect them either at the Vinayagar Sanctum or at PGP Hall. Thereafter, they can commence the procession to Sri Thendayuthapani Temple to fulfil their offerings.
- Devotees collecting Milk Pots from Sri Thendayuthapani Temple should enter the temple via River Valley Road and collect the Milk Pot before proceeding with the offering.

### KAVADI TICKET

| Offering | Registration Period | Registration Fee |
|---|---|---|
| Milk Kavadi & Cradle Kavadi | 10.12.2025 to 30.01.2026 | $40 |
| Spike Kavadi & Chariot Kavadi | 14.12.2025 to 25.01.2026 | $100 |

- **Milk / Cradle Kavadi Tickets must be registered online.**
  - o Devotees requiring assistance for online registration can approach both temples from 6.00PM to 8.30PM
- Spike / Chariot Ratha Kavadi tickets must be registered online. The fees should be paid at Sri Srinivasa Perumal temple after which receipts will be issued.

- **For devotees under 16 years old:**
  - o They are only allowed to carry Milk Pots or Milk Kavadis.
  - o They are not permitted to pierce themselves.

## IMPORTANT ANNOUNCEMENTS FOR ALL DEVOTEES:

- Devotees carrying Spike or Chariot Kavadi must appoint an accompanying person (aged 21 or above) as their Kavadi representative. Both the Kavadi bearer and their representative will be responsible for the conduct of their group.
- Devotees with health conditions (e.g., diabetes, heart disease, high blood pressure) should consult their family doctor before deciding to carry a Kavadi.
- Devotees carrying Spike or Chariot Kavadi must enter Sri Srinivasa Perumal Temple via Race Course Road.

| Offering | Entry Time (Sri Srinivasa Perumal Temple) | Exit Time (Sri Srinivasa Perumal Temple) |
|---|---|---|
| Milk Pot | Only during registered time slot | |
| Milk Kavadi | 31.01.2026, 8:00 PM onwards | 01.02.2026, By 12:00 PM |
| Cradle Kavadi | | |
| Chariot Kavadi & Spike Kavadi (AM) | 01.02.2026, 2:00 AM to 9:00 AM | |
| Chariot Kavadi & Spike Kavadi (PM) | 01.02.2026, 9:00 AM to 3:00 PM | 01.02.2026, By 5:00 PM |

### SPECIAL ARRANGEMENTS

**Sri Srinivasa Perumal Temple**

- If needed, volunteers will provide the service of piercing spikes for devotees carrying Kavadis.

**Sri Thendayuthapani Temple**

- For the convenience of devotees fulfilling tonsuring vows, proper arrangements have been made near the temple during the following hours:

| Date | Time |
|---|---|
| From 17.01.2026 to 30.01.2026 | 8:00 AM to 12:00 PM; 5:00 PM to 8:00 PM |

- Note: There will be no tonsuring service on the eve of Thaipusam or on the day of Thaipusam

## SILVER CHARIOT PROCESSION, 31.01.2026, SATURDAY

- The Silver Chariot carrying Lord Muruga will leave Sri Thendayuthapani Temple at 5:00 AM and stop at the following locations:

| Stop Location | Approximate Time |
|---|---|
| Sri Mariamman Temple, South Bridge Road | 6:30 AM |
| Sri Layan Sithi Vinayagar Temple, Keong Saik Road | 7:30 AM |

- The Silver Chariot will depart from Sri Layan Sithi Vinayagar Temple at 5:00 PM and follow the route below:
- The following information is subject to changes

| Stop Location | Approximate Time |
|---|---|
| Bank of India, Cecil Street | 6:40 PM |
| Indian Overseas Bank, Cecil Street | 7:00 PM |
| Synagogue Street | 7:30 PM |
| High Street | 8:15 PM |
| Sri Thendayuthapani Temple | 9:00 PM |

### LUNCH

- On 01.02.2026, Sunday, lunch will be served at the open field opposite Sri Thendayuthapani Temple from 12:00 PM to 3:00 PM

